# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 6th Term Examination – 2021

FWC


| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் I<br>Christian Civilization I | Two Hours<br>Gr -13 (2021) | 49 | T | I |

**அறிவுறுத்தல்கள்:**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட
  விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய விடைத்தாளில் புள்ளடி இடுக.

01. யூதர்கள் பபிலோனியாவிலிருந்து தம் தாய்நாடான பலஸ்தீனாவிற்கு சென்ற பின்னர் மேற்கத்தேய நாகரிகங்களின் செல்வாக்கிற்குட்பட்டனர். இந்நாகரிகங்களாகக் கருதப்படுவது.
    (1) சுமேரிய எகிப்திய நாகரிகங்கள்
    (2) அசீரிய, பாரசீக நாகரிகங்கள்
    (3) பாரசீக, எகிப்திய நாகரிகங்கள்
    (4) கிரேக்க, உரோமைய நாகரிகங்கள்
    (5) பபிலோனிய, பாரசீக நாகரிகங்கள்

02. திருவிவிலியம் கிரேக்க மொழித்தாக்கத்திற்கு உட்பட்டது என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு
    (1) பழைய ஏற்பாடு முழுவதும் கிரேக்க மொழியில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டமை
    (2) திருவிவிலிய நூல்கள் அனைத்தும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டமை
    (3) யோவானும், பவுலும் தமது நூல்களை கிரேக்க மொழியிலே எழுதியமை
    (4) ஆரம்பகால திருத்தந்தையர்கள் கிரேக்க மொழியிலே நூல்களை எழுதியமை
    (5) புதிய ஏற்பாட்டின் எல்லா நூல்களுமே கிரேக்க மொழியில் எழுதப்பட்டமை

03. இஸ்ரயேல் அரசு பிளவுபட்டபின் வடஅரசிலே பணிபுரிந்த எழுத்துவடிவம் பெறாத இறைவாக்கினர்கள்
    (1) எலியா, எலிசேயு (2) எசாயா, மீக்காயா (3) ஆமோஸ், ஓசேயா
    (4) எலியா, எசாயா (5) நாத்தான், காத்

04. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக
    - இஸ்ரயேலரின் சமய, சமூக கலாசாரங்களில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது.
    - இலக்கியங்கள் தோற்றம் பெற ஆரம்பித்தன.
    - கட்டடக்கலையில் பாரிய வளர்ச்சி ஏற்பட்டது.

    மேற்குறித்தவை இஸ்ரயேலரின் வரலாற்றின் முக்கியமான ஒரு காலகட்டத்தை விளக்குகின்றது. அக்காலமாக அமைவது
    (1) குலமுதுவர் காலம் (2) எகிப்திய அடிமைத்தனக்காலம்
    (3) நீதித்தலைவர்கள் காலம் (4) அரசர்கள் காலம் (5) இறைவாக்கினர் காலம்

05. சாக்கடலுக்கு கிழக்கே அமைந்துள்ள உயர்ந்த மலைநாடு
(1) அம்மோன் (2) கிலயாது (3) பாசான்
(4) ஏதோம் (5) மோவாபு

06. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக
A- தாவீது எபிரோனில் இருந்து யூதாவை மட்டும் நாற்பது ஆண்டுகள் ஆட்சி செய்தார்
B- தாவீது எபுசேயர் வசமிருந்த எருசலேமைக் கைப்பற்றி அரண்மனையைக் கட்டினார்
C- சாலமோன் வாணிபப் போக்குவரத்திற்காக சீதோன் துறைமுகத்தைக் கட்டினார்
D- தாவீது பல அரேபிய நாடுகளுடன் வாணிபத் தொடர்புகளை ஏற்படுத்தி பலஸ்தீனாவின் பொருளாதாரத்தை மேம்படுத்தினார்
E- சவுல் அமெலேக்கியரையும், பெலிஸ்தியரையும் தோற்கடித்து யூதமக்களுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தினார்

இவற்றுள் சரியான கூற்றுக்கள் யாவை?
(1) A, B, C (2) B, D, E (3) C, D, E (4) A, B,E (5) B, C, D

07. முதலும் முடிவுமற்ற இறைவன் என்ற தனித்துவமான பண்பினைக் குறிக்கும் பெயராவன
(1) யாவேயீரே (2) ஏல்சடாய் (3) அதோனாய்
(4) ஏல் பெரித் (5) ஏல் ஏலியோன்

08. இயேசுவை சிலுவையில் அறைந்தபோது "நாசரேத்தூர் இயேசு யூதர்களின் அரசன்" என்ற அறிக்கை தொங்க விடப்பட்டது. இவ்வறிக்கையின் மூலம் நற்செய்தியாளர் யோவான் காட்ட முனைவது
(1) யூதர்களின் அரசன் இயேசு என்பது
(2) பிலாத்துவின் பிடிவாதம்
(3) புறவினத்தார் இயேசுவை ஏற்றுக்கொள்வார்கள் என்பது
(4) இயேசுவை மக்கள் அரசனாக ஏற்றுக் கொண்டார்கள் என்பது
(5) இயேசு தன்னை அரசனாக்கிக் கொண்டதால் மக்களின் ஏளனத்திற்கு உள்ளாவார் என்பது

09. மூன்றாம் எருசலேம் ஆலய அழிவு இடம் பெற்ற காலம்
(1) இஸ்ரயேல் அரசு இரண்டாகப் பிளவுபட்ட போது
(2) பபிலோனியப் படையெடுப்பின் போது
(3) பலஸ்தீனா உரோமைய ஆளுகைக்குட்பட்ட போது
(4) இஸ்ரயேல் - பலஸ்தீனா யுத்தத்தின் போது
(5) உரோமைய இனத்தவரான ரைற்றஸ் ஆளுநரினால் உண்டான அழிவின் போது

10. இஸ்ரயேலர் பபிலோனிய அடிமைத்தனத்தின் பின்னர் ஆட்சியாளர்களால் ஆளப்பட்டனர் என்பதைக் கால ஒழுங்கில் கொண்ட தொகுதி
(1) கிரேக்கர், பேசியர், உரோமையர்
(2) பேசியர், கிரேக்கர், உரோமையர்
(3) பேசியர், ஆமோனியர், உரோமையர்
(4) பெலிஸ்தியர், கிரேக்கர், உரோமையர்
(5) அசீரியர், பேசியர், கிரேக்கர்

11. மத்தேயுவின் 5: 3–12 மலைப்பேறுகளில் காணப்படாத விடயம்
(1) தூய ஆவி (2) இறையரசு (3) அமைதி (4) ஏழ்மை (5) துயரம்

12. இறையாட்சியின் வளர்ச்சியை எடுத்துக்காட்ட இயேசு பயன்படுத்திய உவமைகளாவன
(1) புதையல், முத்து (2) முத்து, வலை (3) கடுகுவிதை, வலை
(4) புளிப்புமாவு, திருமணவிருந்து (5) கடுகுவிதை, புளிப்புமாவு

13. பவுல் இவ் இறைவார்த்தைப் பகுதிகளைப் பயன்படுத்தி விளக்க முற்பட்ட கிறிஸ்தவ சபையினரும் விடயமும்
- "நீங்கள் கிறிஸ்துவின் உடலாக இருக்கிறீர்கள்
- "நாம் ஒரே தூய ஆவியினால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்

(1) உரோமைய சபையினருக்கு சட்டத்திற்கு மேலான இறையருளை விளக்குவதற்காகும்
(2) கலாத்திய சபையினருக்கு கிறிஸ்தவ சகோதரத்துவத்தை விளக்குவதற்காகும்
(3) கொலோசேய சபையினருக்கு கிறிஸ்துவின் மேன்மையை விளக்குவதற்காகும்
(4) கொரிந்திய சபையினருக்கு கிறிஸ்தவ ஒற்றுமையை விளக்குவதற்காகும்
(5) கொரிந்திய சபையினருக்கு திருமுழுக்கின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காகும்

14. அனனியா, சபிரா இருவரின் மாறான எண்ணங் கொண்ட நடத்தை மூலம் பெற்றுக் கொண்ட படிப்பினைகளில் பொருத்தமற்றது
(1) மனிதரை ஏமாற்றினாலும் தூய ஆவிக்கு எதிராக செயற்படக் கூடாதென்பது
(2) மக்களின் நன்மதிப்பைப் பெற திருச்சபையில் நாமும் முன்வர வேண்டுமென்பது
(3) திருச்சபையை ஏமாற்றுகின்றவர்கள் மட்டுமல்ல, அதற்கு உடந்தையாயிருப்பவர்களும் தண்டிக்கப்படுவார்கள் என்பது
(4) திருச்சபையில் பொய்வாழ்க்கை, பாசாங்கு வாழ்க்கைக்கு இடமில்லையென்பது
(5) நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களையும் இறைவன் அறிவாரென்பது

15. யூத வழிபாட்டில் மூன்று முக்கிய விழாக்கள் உள்ளன. அவற்றுள் பெந்தக்கோஸ்தே விழா தொடர்பான கருத்துக்களில் தவறானது
(1) இவ்விழா அறுவடையின் முடிவுவிழாவாகக் கொண்டாடப்பட்டது,
(2) தமது வயல்நிலங்களில் அறுவடைக்காக கூடாரம் அமைத்துத் தங்கியிருந்ததை நினைவுகூரும் நாளாகக் கருதினர்
(3) இஸ்ரயேலர் தம் விளைநிலங்களின் புதுப்பலன்களின் முதல் காணிக்கையாக அளித்து நினைவு கூர்ந்தனர்
(4) விடுதலைப் பயணத்தின் பின்னர் யாவேயோடு அவர்கள் செய்து உடன்படிக்கையை நினைவு கூரும் நாளாகக் கருதினர்.
(5) இறைவன் மோசேயிடம் பத்துக்கட்டளைகளைக் கொடுத்த நாளாகக் கருதினர்

16. பேதுரு ஆற்றிய முதல் மறையுரையின் விளைவாக இஸ்ரயேலர் தாம் செய்த மாபெரும் தவறை உணர்ந்தவர்களாக நாம் என்ன செய்ய வேண்டும் என வினாவிய போது பேதுரு பின்வரும் மூன்று காரியங்களைச் செய்யுமாறு ஆலோசனை வழங்கினார். இவற்றுள் சரியானவை
A- மனம் மாறுங்கள்
B- நீங்கள் செய்த தவறுகளை உணர்ந்து கொள்ளுங்கள்
C- உங்கள் பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுவதற்காக திருமுழுக்குப் பெறுங்கள்
D- ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்று மனமாற்றம் அடையுங்கள்
E- நெறிகெட்ட இந்தத் தலைமுறையிலிருந்து விலகிவாழ்ந்து உங்களை நீங்கள் காப்பாற்றிக் கொள்ளுங்கள்
(1) A, B, C (2) B, D, E (3) C, D, E (4) A, B,E (5) A, C, E

17. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A- கிரேக்க, உரோமைய பண்பாடுகளுக்கு மதிப்பளித்து ஆடம்பரத்தில் வாழ்ந்தனர்

B- குற்றங்களை விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தனர்

C- ‘கடவுளே ஒரே அரசர்’ என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர்

D- கடுமையான வரிவசூலிப்பு முறைகளைக் கையாண்டனர்

E- தமது உடமைகள் அனைத்தையும் பொதுப்பொருளாகக் கொண்டிருந்தனர்

மேற்குறித்தவற்றுள் யூதசமயக்குழுக்கள் குறித்த சரியான கூற்றுக்களாவன.

(1) A, B,C (2) A,C,E (3) B,C,D (4) C,D,E (5) A,B,D

18. இஸ்ரயேலரின் புராதன விழாக்களில் “ திஸ்ரி மாதம் பதினைந்தாம் நாளின் பின் எட்டு நாட்கள் தொடர்ச்சியாகக் கொண்டாடப்படும் விழாவாக அமைவது

(1) ஆலய அர்ப்பணவிழா (2) புளியாத அப்பத்திருவிழா (3) கூடாரத்திருவிழா

(4) வாரங்களின் விழா (5) பாஸ்காத் திருவிழா

19. இஸ்ரயேலின் வடஅரசில் ‘சமாரியர்’ என்னும் மக்கள் இனம் உருவாகியமைக்கு காரணம்

(1) இஸ்ரயேலர் சிலர் அசீரியாவில் குடியேறியமையாகும்

(2) இஸ்ரயேலர் சிலர் பபிலோனியாவில் குடியேறியமையாகும்

(3) அசீரியாவிற்கு நாடுகடத்தப்பட்ட வடபகுதியினர் மீண்டும் தமது நாட்டிற்குத் திரும்பி வராமையாகும்

(4) இஸ்ரயேலில் எஞ்சியிருந்தவர்களுக்கும், குடியமர்த்தப்பட்ட பிறஇனத்தவர்களுக்கும் இடையில்நடைபெற்ற கலப்புத் திருமணமாகும்.

(5) பபிலோனியாவில் குடியிருந்தவர்களுக்கும், இஸ்ரயேலில் எஞ்சியிருந்தவர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலப்புத் திருமணமாகும்.

20. இயேசுவின் காலத்து பாலஸ்தீனப் பண்பாட்டுக்குரிய சோடிகள் கீழே தரப்பட்டுள்ளன.அவற்றுள் சமூக மரபுகளைக் குறிக்கும் சோடி எது?

(1) திருமணம், செபம் (2) நோன்பு, விருந்தோம்பல் (3) திருமணம், வீடு

(4) தருமம், கல்விமுறைகள் (5) விருந்தோம்பல், விழாக்கள்

21. தூய பவுலின் எழுத்தாக்கங்களில் கிரேக்கத் தாக்கம் அதிகளவில் காணப்படுகின்றது. திருமடல்களில் ‘காரிஸ்மா’ என்ற சொல்லைப் பயன்படுத்தி விளக்க முற்பட்டது.

(1) கிறிஸ்துவின் வெறுமையாதலை விளக்குவதற்கு

(2) தூய ஆவி எமக்கு அளிக்கும் விசேட அருட்கொடைகளை விளக்குவதற்கு

(3) கொரிந்திய சபைக்கு கிறிஸ்தவ ஒற்றுமையை விளக்குவதற்கு

(4) தெசலோனிக்க சபையினருக்கு இரண்டாம் வருகையை விளக்குவதற்கு

(5) கொலோசேய சபையினருக்கு கிறிஸ்தவ சகோதரத்துவத்தை விளக்குவதற்கு

22. தூய ஆவியின் எல்லா அருட்கொடைகளை ஒருவன் கொண்டிருந்தாலும் அன்பு இல்லையேல் இடைவெளிக்குப் பொருத்தமானது

(1) எதற்கும் மதிப்பில்லாது போகும்

(2) கிறிஸ்தவ வாழ்விற்கு அர்த்தமில்லாமல் போகும்

(3) ஒன்றுமில்லை

(4) உலகமே தனதாக்கிக் கொண்டாலும் அழிந்து போகும்

(5) ஒலிக்கும் வெண்கலமும் ஓசையிடும் தாளமும் போலாகும்

23. இறைவனின் பரிவன்பு தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரயேலருக்கு மட்டும் உரியதல்ல என்பதை உணர்த்தும் இறையாட்சி பற்றிய புதுமையானது
(1) கெரசேனர் பகுதியில் பேய்பிடித்த ஒருவர் நலமாகுதல்
(2) ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்தல்
(3) நூற்றுவர் தலைவர் ஒருவரின் பணியாளர் நலமாகுதல்
(4) நயீன் விதவையின் மகன் உயிர்பெறுதல்
(5) நீர் திராட்சை இரசமாக மாறல்

24. கிறிஸ்தவத்தின் பரம்பலுக்கு முக்கிய கருவிகளாக விளங்கியவை
(1) பவுலின் திருமுகங்களும், எருசலேம் சங்கத் தீர்மானங்களும்
(2) பவுலின் மறைபரப்புப் பயணங்களும், திருமுகங்களும்
(3) திருத்தூதர்களின் படிப்பினைகளும், நற்செய்தி நூல்களும்
(4) உயிர்த்த இயேசுவின் தரிசனங்களும், இயேசுவின் மேல் நம்பிக்கையும்
(5) பவுலின் மனமாற்றமும், தூய ஆவியின் வல்லமையும்

25. பவுல் துன்பங்களையும், சவால்களையும் வெற்றி கொண்ட ஓர் இடம்
(1) பெருகை (2) எதென்ஸ் (3) கொரிந்து (4) பிலிப்பி (5) பாப்போ

26. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A- கிறிஸ்தவர்கள் குடிவெறி, களியாட்டங்களில் ஈடுபடுகின்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார்கள்
B- தூய இரேணியுஸ், தூய பெர்பெத்துவா, பெலிசித்தா என்பவர்கள் வேதசாட்சியாக மரித்தனர்
C- பேரரசுக்கு இறையாசீர் வேண்டி உரோமைத் தெய்வங்களுக்கு பலி செலுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டனர்
D- அலெக்ஸ்சாந்திரிய டயோனிசியஸ், தூய பபியன், ஒரிஜின் என்பவர்கள் மறைசாட்சிகளாக மரித்தனர்
E- கிறிஸ்தவர்கள் பொதுப் பாதுகாப்பின் பெயரால் துன்புறுத்தப்பட்டனர்

மேற்குறித்தவற்றுள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய மன்னன் தீசியுஸ் தொடர்பான கூற்றுக்களாவன.
(1) A,D (2) A, B (3) C, D (4) D, E (5) B, C

27. மரியாள் தேவதாய் என்பதை உறுதிப்படுத்துவதற்குக் காரணமாயிருந்த தவறான கொள்கையை முன்வைத்தவர்.
(1) நெஸ்தோரியஸ் (2) இயுத்திக்கஸ் (3) ஆரியுஸ்
(4) புனித சிறில் (5) லூசியன்

28. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட முதலாவது சிலுவைப்போரில் திருச்சபைக்கு உரிமையாக்கிக் கொள்ள முடிந்தது.
(1) உரோமையை ஆகும்
(2) பரிஸ் பல்கலைக்கழகத்தை ஆகும்
(3) கொன்ந்தாந்நோபிளில் ஆகும்
(4) விட்டென்பேர்க் பல்கலைக்கழகத்தை ஆகும்
(5) எருசலேமை ஆகும்

29. பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட பிரான்சிஸ்கன் துறவற சபையிலிருந்து தோன்றிய சபை
(1) வின்சென்சியன் சபை (2) கப்புச்சின் சபை (3) அன்பின் கன்னியர் சபை
(4) கார்மேல் சபை (5) திருச்சிலுவைக் கன்னியர் சபை

30. சீர்திருத்த சபைகளின் போதனைகளுக்குப் பதிலளிப்பதற்காகவும், கத்தோலிக்க திருச்சபையின் உறுதித்தன்மையை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் 1545இல்
(1) துறவற சபைகள் ஆரம்பிக்கப்பட்டன
(2) பப்ரிஸ்ட் மிசனரி சபை ஆரம்பிக்கப்பட்டது
(3) கல்சடோன் பொதுச்சங்கம் கூட்டப்பட்டது
(4) திரிதெந்தீன் பொதுச்சங்கம் கூட்டப்பட்டது
(5) பல்கலைக்கழகங்களுக்கு அருகாமையில் கார்மேல் துறவற மடங்கள் உருவாக்கப்பட்டன.

31. பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வட பிரான்சில் தோன்றிய கட்டடக்கலை
(1) உரோமானெஸ்க் (2) பரோக் (3) பைசாந்திய
(4) கோதிக் (5) பசிலிக்கா

32. மறுமலர்ச்சிக்காலச் சித்திரக்கலைஞர்களில் பொருத்தமற்றவர்
(1) பேட்டிசெல்லி (2) ஜியான் லோரென்சோ பெர்ன்னி
(3) மைக்கல் ஆஞ்சலோ (4) லியோனாடோ டாவின்சி (5) பியாட்டோ டக்சியோ

33. ஜப்பானில் நாகசாக்கி நகரத்தை தம் பணித்தளத்தின் மையமாகக் கொண்டு மறைபரப்புப் பணியாற்றியவர்கள்
(1) கார்மேல் சபையினர் (2) இயேசு சபையினர் (3) பிரான்சிஸ்கன் சபையினர்
(4) டொமினிக்கன் சபையினர் (5) ஆசீர்வாதப்பர் சபையினர்

34. போர்த்துக்கேயர் கால தமிழ் கிறிஸ்தவ இலக்கியங்களின் உருவாக்கத்திற்கு காரணமானவர்
(1) அருட்பணி எம்மானுவேல் கொஸ்தா (2) தொன் ஜெரோணிமோ
(3) அழகிய வண்ணன் முகத்தல் (4) பேதுருப் புலவர்
(5) என் எஸ் கொடமான

35. ஜப்பானில் மதச்சுதந்திரம் எந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது?
(1) 1898 (2) 1871 (3) 1861 (4) 1860 (5) 1818

36. புனித பவுல் 1கொரி.12: 12-31 பகுதியில் எதனைப் பற்றிக் கூறுகின்றார்?
(1) தூதுரைப் பணியின் தேவை (2) தாழ்மை, கீழ்ப்படிதல்
(3) திருச்சபையின் ஒருமைப்பாட்டின் தேவை (4) அன்பின் உன்னதநிலை
(5) மேய்ப்புப் பணியின் பெறுமதி

37. இலங்கையில் போர்த்துக்கேயரின் மறைபரப்புப் பணியின் குறைபாடாக எதனைக் குறிப்பிடலாம்?
(1) உள்நாட்டுக் குருக்களைப் பயிற்றுவிக்காமையாகும்
(2) சமய நூல்களை வெளியிட்டமையாகும்
(3) மக்களுக்கான சேவைகள் கவர்ச்சிகரமற்றதாய் காணப்பட்டமை
(4) போர்த்துக்கலின் அனுசரணை கிடைக்காமை
(5) அரசியல் அதிகாரத்திற்கு கீழ்ப்படியாமை

38. இறைசாயலினதும் மனித மாண்பினதும் பண்புகளாவன

(1) கீழ்ப்படிதலும் தாழ்மையும் ஆகும்
(2) அறிவாற்றலும் ஞானமுமாகும்
(3) அன்பும் இரக்கமும் ஆகும்
(4) தியாகமும் பரிவும் ஆகும்
(5) தேவபயமும் அறிவூட்டலும் ஆகும்

39. சீரியாவின் அந்தியோக்கியாவில் நிலவிய யூத, யூதரல்லாத அங்கத்தவர்களையுடைய கலப்புச் சபையில் பணியாற்றுவதற்கு புனித பவுலுக்கு யார் மூலமாக சந்தர்ப்பம் கிட்டியது?

(1) அனனியா
(2) புனித பேதுரு
(3) பர்ணபா
(4) யோவான் மாற்கு
(5) ஆக்கிலா, பிரிஸ்கிலா

❖ **கீழ்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி 40 – 43 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.**

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>திருச்சபையின் மறைவல்லுநர் | B<br>உடுவில் மகளிர் கல்லூரி | C<br>றோயல் கல்லூரி | D<br>ஞானார்த்த பிரதீபய | E<br>தன்னிலை ஏற்பு |
| F<br>மனிதரின் மீட்பர் | G<br>கத்தோலிக்க பாதுகாவலர் | H<br>உதயதாரகை | I<br>கிறிஸ்தவ மனித உரிமை | J<br>சும்மா கொன்த்ரா ஜென்திலேஸ் |
| K<br>அவனியில் அமைதி | L<br>ஆன்மாவின் கோட்டை | M<br>இறைவனின் நகர் | N<br>திருச்சபையின் சமூக ஈடுபாடு | O<br>பபிலோனிய அடிமைத்தனம் |

40. மாட்டின்லூதரோடு தொடர்புடைய சோடி எது?

(1) B,H (2) I.O (3) N,I (4) O,J (5) A,F

41. தூய அவிலா தெரேசாவுடன் தொடர்புடைய சோடி

(1) L,M (2) A.E (3) A,L (4) J,O (5) G,L

42. ஆங்கிலேயர் காலத்தில் பணிபுரிந்த அமெரிக்கன் மிஷன் சபையினர் தொடர்பான சோடி

(1) C,D (2) B,G (3) M,E (4) A,B (5) B,H

43. திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுலுடன் தொடர்புடைய சோடி

(1) F,N (2) F,O (3) M,N (4) G,H (5) K,F

44. யோவான் லத்தரன் ஆலயத்தின் அமைப்பு

(1) உரோமைய ஆலய அமைப்பு முறையைக் கொண்டது
(2) பைசாந்திய ஆலய அமைப்பு முறையைக் கொண்டது
(3) கோதிக் ஆலய அமைப்பு முறையைக் கொண்டது
(4) பைசாந்திய, கோதிக் ஆலய அமைப்பு முறைகளின் கலப்பு ஆகும்
(5) கோதிக், உரோமானிய ஆலய அமைப்பு முறைகளின் கலப்பு ஆகும்

45. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த மூன்று மறைபரப்புக் குழுவினர்

A- இலண்டன் மிசனிரி சங்கம்
B- பப்ரிஸ்ட் திருச்சபை
C- மெதடிஸ் திருச்சபை
D- கல்வினிஸ் சீர்திருத்த திருச்சபை
E- தேவ அன்பின் சபை

(1) C,D,E (2) A,C,D (3) BDE (4) A,B,C (5) A,D,E

46. உழைப்பு மனிதனுக்காக உளதேயன்றி மனிதன் உழைப்புக்காக அன்று' என்ற மையக்கருத்தைஅடிப்படையாகக் கொண்டு எச்சுற்றுமடல் யாரால் எழுதப்பட்டது?
(1) தொழிலாளர் நிலைமை - திருத்தந்தை 13ஆம் லியோ
(2) நூறாவது ஆண்டு - திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல்
(3) மனித உழைப்பு - திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல்
(4) அவனியில் அமைதி - திருத்தந்தை 23 ஆம் யோவான்
(5) அன்னையும் ஆசிரியையும் - திருத்தந்தை 23 ஆம் யோவான்

47. ஆசிய கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் சமூக நோக்கங்களில் குறிப்பிடத்தக்கது
(1) பல்சமயங்களுக்கிடையில் உரையாடலை ஏற்படுத்துதல்
(2) சமய வன்முறைக்கெதிராகக் குரல் கொடுத்தல்
(3) ஏழைகளின் வாழ்வில் அக்கறை காட்டுதல்
(4) எயிட்ஸ் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
(5) நம்பிக்கை, திருப்பணி, ஐக்கியத்தை வளர்த்தல்

48. பல்சமய உரையாடல் பற்றிய படிப்பினைகளைக் காண உதவும் ஆயர் மன்ற நிறைவு மறைத்தூது மடல்
(1) ஆசியத் திருச்சபையும் நற்செய்திப் பணியும்
(2) ஆசியத் திருச்சபை
(3) மனித மேம்பாடும் கிறிஸ்தவ பங்களிப்பும்
(4) திருச்சபைகளின் கூட்டமைப்பு
(5) ஆசிய ஒன்றிப்பு

49. எதிர்கால உலகிற்கு ஏற்றவாறு திருச்சபைக்குப் புத்துயிர் ஊட்டலும் இற்றைப்படுத்துதலும் தேவை என்பதில் கவனம் செலுத்திய திருத்தந்தை யார்?
(1) திருத்தந்தை 2ஆம் யோவான் பவுல்
(2) திருத்தந்தை 6ஆம் பவுல்
(3) திருத்தந்தை 12ஆம் கிரகோரியார்
(4) திருத்தந்தை 23ஆம் யோவான்
(5) திருத்தந்தை 13ஆம் சிங்கராயர்

50. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் தீர்மானங்களும் கட்டளைகளும் முதன்முதலாகப் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது.
(1) மறைத்தூதுப் பணிகளிலாகும்
(2) துறவற வாழ்க்கையிலாகும்
(3) குருத்துவ வாழ்விலும் பணிகளிலுமாகும்
(4) இறைவெளிப்பாட்டிலாகும்
(5) திருவழிபாட்டிலாகும்

FWC

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் II<br>Christian Civilization II | Three Hours<br>Gr -13 (2021) | 49 T II |

**அறிவுறுத்தல்கள் :**

❖ பகுதி 1 இலிருந்து **இரண்டு** வினாக்களையும், பகுதி 11 இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## *பகுதி* – I

01. (i) அலெக்ஸ்சாந்திரிய கல்விக்கூடத்தின் பண்புகள் நான்கினைத் தருக. (2 புள்ளிகள்)

(ii) ஆரம்பக் கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் திருச்சபைக்கு ஆற்றிய பங்களிப்பினைச் சுருக்கமாக விபரிக்குக (4 புள்ளிகள்)

(iii) யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகள் கிறிஸ்தவ இலக்கியத்திற்கு ஆற்றிய சேவை பற்றி விபரிக்குக (6 புள்ளிகள்)

(iv) போர்த்துக்கேயர் மறைப்பணியை துரிதமாக மேற்கொள்வதற்கு அவர்கள் கையாண்ட வழிமுறைகள் குறித்துக் கலந்துரையாடுக. (8 புள்ளிகள்)

02. (i) ஆசியாவில் கிறிஸ்தவம் பரவியதற்கான பின்னணிகள் நான்கினைப் பட்டியற்படுத்துக. (2 புள்ளிகள்)

(ii) இந்தியாவில் காணப்படுகின்ற கீழைத்தேய திருச்சபைகள் நான்கினைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றைப் பற்றிச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(iii) மத்தியகாலத் திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சமயப் பின்னணி பற்றி விபரிக்குக (6 புள்ளிகள்)

(iv) புரட்டஸ்தாந்து சீர்திருத்தத்தின் விளைவாகக் கத்தோலிக்க திருச்சபையில் ஏற்பட்ட புதுப்பித்தல் பற்றிக் கலந்துரையாடுக. (8 புள்ளிகள்)

03. (i) இஸ்ரயேலின் அரசாட்சி ஆரம்பித்தமைக்கான நான்கு காரணங்களைத் தருக. (2 புள்ளிகள்)

(ii) இஸ்ரயேலர்கள் மத்தியில் நீதிபதிகள் ஆற்றிய பணிகளைச் சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(iii) கிறிஸ்தவத்தில் கிரேக்க மொழிச் செல்வாக்குப் பற்றி விபரிக்குக (6 புள்ளிகள்)

(iv) டொமினிக்கன் துறவற சபையினர் திருச்சபையின் மேம்பாட்டிற்கு ஆற்றிய பங்களிப்புப் பற்றிக் கலந்துரையாடுக. (8 புள்ளிகள்)

## பகுதி – II

04. (i) ''கிறிஸ்தவ குடும்பம் சமுதாயத்தின் உறைவிடமாகத் திகழ்கின்றது'' என்பதைப் பவுலின் திருமடலின் ஒளியில் விளக்குக.

(ii) அண்மைக்கால உலகநாடுகள் முழுவதும் ஏற்பட்ட 'கொவிட் 19' தொற்றுநோய் காரணமாகக் குடும்பத்தில் ஏற்படுத்திய விளைவுகள் பற்றிய உமது கருத்துரையை வழங்குக.

(10x2=20 புள்ளிகள்)

05. (i) மொசேயிக் சித்திரக்கலையின் பண்புகள் பற்றி விளக்குக.

(ii) 'பாடசாலை மாணவர்களின் கலையுணர்வை வளர்ப்பதில் கல்வி சிறந்த ஊடகமாகத் திகழ்கின்றது' இக்கூற்றினைத் தெளிவுபடுத்துக.

(10x2=20 புள்ளிகள்)

06. (i) பழைய ஏற்பாட்டை நிறைவு செய்ய வந்த கிறிஸ்து சட்டத்தினுள் புகுந்த பழைய மரபுகளைக்கடுமையாகச் சாடினார் விளக்குக.

(ii) கிறிஸ்து எவ்வாறு தமது சமூகத்துடன் தம்மை ஒன்றுபடுத்தி இணைத்துக் கொண்டார் என்பதை விளக்குக.

(10x2=20 புள்ளிகள்)

07. (i) பதினொராம் நூற்றாண்டில் திருச்சபையில் பெரும் பிளவு ஏற்படுவதற்கு வழிகோலிய காரணிகளை விபரிக்குக.

(ii) உலகில் ஏற்படும் வன்முறைச் சூழலின் போது ஒரு கிறிஸ்தவன் எவ்வாறு செயற்பட வேண்டும் என விபரிக்குக.

(10x2=20 புள்ளிகள்)

08. (i) இலங்கையின் கல்விக்கு இன்றைய திருச்சபை ஆற்றியுள்ள பணிகளை விளக்குக.

(ii) கிறிஸ்தவ மறையைப் பரப்புவதில் கல்வி எவ்வாறு சிறந்த ஊடகமாக விளங்கியதென்பதை விளக்குக.

(10x2=20 புள்ளிகள்)